# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, FAST TRACK MAHILA COURT, THANJAVUR.

**SC. No - 186/2019**

**PW - 1(**முதல் விசாரணை தொடர்ச்சி**)**

| | | | |
|---|---|---|---|
| Name | | Occupation | |
| Husband/Father's Name | | Village | |
| Age | | Taluk | |
| Date | 30.06.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

**(A1 to A4 present.)**

**(முதல் விசாரணை தொடர்ச்சி)**

3. வீட்டில் என்னுடைய மகளை அவருடைய கணவரும் மாமியாரும் தொடர்ந்து அடித்து துன்புறுத்தி வந்தார்கள் வீட்டிலேயே நிம்மதியாக இருக்க விடவில்லை. அடிக்கடி என் மகள் எங்கள் வீட்டுக்கு வந்து விடுவார். நாங்கள் விவாகரத்து செய்துவிடலாம் என பேசி வந்தோம். நாங்கள் புகார் கொடுக்க காவல் நிலையத்திற்கு போகலாம் என கூறப்பட்ட சமயத்தில் மாப்பிள்ளையின் அண்ணன் எங்களை வந்து தடுத்து இதுபோல் இனிமேல் நடக்காது பார்த்துக் கொள்ளலாம் என சொல்லி என் மகளையும் மீண்டும் கூட்டிப் போய்விட்டார். கொஞ்ச நாள் சுமார் பத்து முதல் 15 நாட்கள் ஒன்றாக இருந்தார்கள் மீண்டும் அதே போல் தான் தொந்தரவு செய்தார். எங்களுக்கு போன் மூலமாக என் மகள் சொன்னார் அப்போது ரொம்ப இருட்டாகி விட்டதால் நாங்கள் உடனடியாக போக முடியவில்லை. காலையில் என் மகள் வீட்டுக்கு வந்து விட்டார். வீட்டில் வாசல் நிலை கால் வைக்க பணம் கேட்டார்கள் ரூபாய் 14,000 கொடுத்தேன். சுமார் ஏழு வருடத்திற்கு முன்பு குழந்தைக்கு அப்போது ஒன்றை வயது தற்போது ஏழு வயதாகி விட்டது எனக்கு தேதி வருடம் தெரியவில்லை, பதினோரு

மணிக்கு காலையில் என் மூத்த மகள் போன் செய்தார். என்னுடைய மூத்த மகள் ரேவதி தான் போன் செய்தார், என் மகள் கலா தூக்கு போட்டுக் கொண்டதாகச் சொன்னார். நான் மட்டும்தான் எங்கள் ஊரிலிருந்து என் மகள் கலாவின் வீட்டுக்குப் போனேன். நான் வந்து பார்த்தபோது என் மகளை படுக்க வைத்திருந்தார்கள். என் பேத்தி மட்டும் அருகில் இருந்தாள் அந்த வீட்டில் அப்போது வேறு யாருமே இல்லை உறவினர்களும் அங்கு இல்லை. நான் அதன் பிறகு அதிராம பட்டினம் காவல் நிலையத்துக்குச் சென்று புகார் கொடுத்தேன். அதன் பிறகு தான் போலீஸ் மூலமாக வந்து என் மகளின் பாடியை எடுத்தார்கள். நான் கொடுத்த புகார் தான்அசாஆ1. மறுநாள் தான் போஸ்ட்மார்ட்டம் செய்து கொடுத்தார்கள். என் மகளின் உடம்பை பெறுவதற்கு கூட அவருடைய கணவர் வீட்டில் இருந்து யாருமே வரவில்லை. இறுதி காரியங்களை நான் தான் செய்தேன். என் மகளின் உடம்பில் தாலி மற்றும் கொலுசு மட்டும்தான் இருந்தது. என் மகளை அடித்து தொங்கவிட்டு விட்டார்கள். அந்த அறையில் காத்தாடியில் கயிறு மட்டும் சும்மா இருந்தது. அங்கு தள்ளிதான் கீழே ஒரு ஸ்டூல் இருந்தது. ஸ்டூல் கீழே விழவில்லை நேராகத்தான் இருந்தது. அந்த கயிறு மூன்று முழத்துக்கு மேலாக இருக்கும் நல்ல மொத்தமாக இருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்**

4. என் மகளை திருமணம் செய்வதற்கு முன்னரே என் மருமகன் ஸ்டாலின் துபாயில் தான் வேலை பார்த்து வந்தார் என்றால் ஆமாம். என் மருமகன் துபாயில் வேலை செய்கிறார் என்பதால் தான் என் மகளை திருமணம் செய்து கொடுத்தேன் என்றால் இல்லை நல்ல மனிதர் என்பதால்தான் திருமணம் செய்து கொடுத்தேன். இந்த திருமணம் ஸ்டாலின் வீட்டில் தான் நடந்தது என்றால் ஆமாம். திருமணத்திற்குப் பிறகு

மீண்டும் தன் வேலைக்காக ஸ்டாலின் துபாய் போய்விட்டார் என்றால் ஆமாம். ஸ்டாலின் துபாய் போய் சம்பாதித்து தான் வீடு கட்டினார் என்றால் நான் பொண்ணு கொடுத்த போது அவர்கள் வீடு கட்டி விட்டார்கள். திருமணத்திற்கு பிறகு ஸ்டாலின் மீண்டும் துபாய் சென்ற பிறகு என் மகளை அழைத்துப் போனாரா என்றால் அழைத்துப் போனார். அங்கு போய் குடித்தனம் செய்தார்கள் என்றால் இல்லை அங்கு போய் இதே கரைச்சல் தான். துபாய்க்கு சென்று எவ்வளவு நாட்கள் என் மகள் அங்கு இருந்தார் என்றால் எவ்வளவு நாள் என்பது எனக்கு தெரியவில்லை. ஸ்டாலின் நல்ல நிலையில் சம்பாதித்து என் மகளையும் துபாய் அழைத்துச் சென்று அங்கு நல்ல முறையில் தான் இருவரும் குடும்பம் நடத்தினார்கள் என்றால் இல்லை. தற்போது வழக்குக்காக வேண்டி துபாய் அழைத்துப் போன போதும் அங்கும் கரைசல் செய்ததாக பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. துபாயிலிருந்து ஸ்டாலினும் என் மகளும் தான் ஒன்றாக ஊருக்கு திரும்பி வந்தார்கள் என்றால் ஆமாம். என் மகள் அவ்வாறு திரும்பி வந்த பிறகு மீண்டும் ஸ்டாலின் துபாய்க்கு போய்விட்டார் என்றால் அவர் எத்தனை முறை வந்தார் எத்தனை முறை மீண்டும் துபாய்க்கு போனார் என்ற விவரங்கள் எனக்கு தெரியாது. மாப்பிள்ளை துபாய் போன பிறகு என் மகள் என்னுடைய வீட்டுக்கு வந்து விடுவாரா என்றால் என் மகள் வந்துவிடுவார் மற்றவர்கள் கொடுக்கின்ற கரைச்சலால் தான் எங்கள் வீட்டுக்கு வந்து விடுவார் . ஸ்டாலினின் தகப்பனார் கணேசனுக்கு 90 வயது என்றால் இருக்காது. அவருடைய மனைவி சந்திராவிற்கு 85 வயது என்றால் இருக்காது. அவர்கள் இருவராலும் எழுந்து நடக்க முடியாது எந்த ஒரு காரியத்தையும் அவர்களாகவே செய்து கொள்ள முடியாத நிலையில்தான் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு

அதிக வயதுடன் அவர்களாலேயே கவனித்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ளவர்கள் என்னுடைய மகளை தொல்லை செய்ததாக பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இரண்டாவது எதிரி கணேசனுக்கு கண் நன்றாகத் தெரியாது அவருக்கு நல்ல சுய நினைவும் இல்லை என்றால் ஏழு வருடத்திற்கு முன்பு அவர் நல்ல நிலையில் தான் இருந்தார் தற்போது வேண்டுமானால் அவ்வாறு இருக்கலாம்.

6. ஸ்டாலின் மூன்று மாதத்திற்கு துபாயில் வேலை செய்துவிட்டு ஒரு வாரம் இந்தியா திரும்பி வந்துவிட்டு மீண்டும் லீவு முடிந்து போய்விடுவார் என்றால் அடிக்கடி துபாயிலிருந்து வந்து போவார் ஆனால் மகளை கட்டிக் கொடுத்த பிறகு நான் அவர்கள் வீட்டிற்கு அவ்வளவாக போனது இல்லை, அதனால் எனக்கு எத்தனை மாதத்திற்கு ஒருமுறை ஸ்டாலின் ஊருக்கு வருவார் என்ற விபரங்கள் தெரியாது. அவ்வாறு ஒரு வாரம் லீவுக்கு ஸ்டாலின் தன் வீட்டுக்கு வரும்போது தான் என் மகள் எங்கள் வீட்டில் இருந்து தன்னுடைய கணவர் வீட்டுக்கு போவார் என்றால் ஸ்டாலின் போன் செய்து விடுவார் நான் ஊருக்கு வருகிறேன் என சொல்வார் நீ அங்கு வந்துவிடு என்னை சொன்னவுடன் என் மகளும் அங்கு போய்விடுவார். துபாய்க்கு மீண்டும் வேலைக்காக ஸ்டாலின் போன உடன் என் மகள் எங்கள் வீட்டிற்கு உடனே வந்து விடுவார் என்றால் இல்லை. ஸ்டாலின் துபாய்க்கு போனவுடன் என் மகள் எங்கள் வீட்டுக்கு வந்து விடுவார் என்றும் வழக்குக்காக தற்போது இல்லை என பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல அவர்கள் கொடுத்த தொந்தரவினால் தான் என் மகள் எங்கள் வீட்டுக்கு வந்து விடுவார். ஸ்டாலின் தன்னுடைய மனைவிக்கு ஒரு ஸ்கூட்டி வாங்கி கொடுத்து அந்தப் பதிவு ஸ்டாலின் பெயரில்தான் இருக்கிறது என்று சொன்னால் யாருக்காக வாங்கி கொடுத்தார் என்று தெரியாது. தன்னுடைய மனைவி என்னுடைய

வீட்டிற்கு வரும்போது கூட பஸ்ஸில் ஏறி வராமல் சொகுசாக வரவேண்டும் என்பதற்காகத்தான் இரு சக்கர வாகனம் கூட ஸ்டாலின் வாங்கிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

7. முதல் பெண் குழந்தை பிறந்த பிறகு என்னுடைய மகள் மீண்டும் கர்ப்பமடைந்தாரா என்றால் ஆமாம். அவ்வாறு கர்ப்பம் அடைந்த சமயத்தில் எங்கள் வீட்டில் இருந்தாரா என்றால் இல்லை கணவர் வீட்டில் தான் இருந்தார். நான் சொல்வது தவறு என்றும் கர்ப்பமடைந்த சமயத்தில் எங்கள் வீட்டில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு இரண்டாவது கர்ப்பமடைந்த சமயத்தில் எங்கள் வீட்டில் மகள் இருந்தபோது இரண்டாவது குழந்தை வேண்டாம் என்று நானும் என் மனைவியும் என் மகளுக்கு சொல்லிக் கொடுத்து கட்டாயப்படுத்தி கருவை கலைக்க செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. அவ்வாறு கருவை கலைத்தது குறித்து தன் கணவர் மற்றும் கணவர் வீட்டாருக்கு தெரியாமல் கட்டாயப்படுத்தி நாங்கள் செய்த காரணத்தினால் என் மகள் அதனால் தான் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளானார் என்றால் சரியல்ல. இந்த நிகழ்வுக்குப் பிறகுதான் ஒண்ணாவது எதிரி ஸ்டாலின் தன் மனைவி மற்றும் மகள் நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்பதற்காக முதல் மாடி தன்னுடைய வீட்டில் கட்டினார் என்றால் முதல் மாடி கட்டினார் ஆனால் நல்லா இருக்க வேண்டும் என்பதற்காக கட்டவில்லை. முதல் மாடி கட்டப்பட்ட சமயத்தில் எங்களுடைய வீட்டில் தான் மகள் இருந்து வந்தார் என்றும் அந்த முதல் மாடி நிலவு கால் வைப்பதற்காகத்தான் போன் செய்து ஒண்ணாவது எதிரி ஸ்டாலின் எனது மகளை அந்த வீட்டிற்கு வரும்படி அழைத்தார் என்றால் சரிதான், வீடு கட்டும் வரை அங்கு தான் இருந்தார் ஒரு நாள் இரவு வந்தார் அன்றே போன் வந்தவுடன் மறுநாள் நிலவு வைக்க வேண்டும் என

போய்விட்டார். என்னுடைய மகள் எங்கள் வீட்டில் தான் தொடர்ந்து இருந்து வந்தார் என்றும் நிலவு வைக்க வேண்டும் என்பதற்காக மட்டும்தான் அந்த ஒரு நாள் கணவர் வீட்டுக்கு போய் வந்தார் என்றால் சரியல்ல.

8. இதுபோல் நிலவு வைப்பதற்காக எந்த நாள் என் மகள் போனார் என குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் தெரியாது. கணவர் வீட்டில் என் மகளுக்கு என தனியாக ஒரு அறை உள்ளது என்றால் ஆமாம். நிலவு வைத்த பிறகு வெளிப்பூச்சு பூசப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அவ்வாறு வெளிப்பூச்சு பூசிக் கொண்டிருந்தபோது கொத்தனார், சித்தாள் ஆகியோர் மாடிப்படி வழியாக மண் சிமெண்ட் எடுத்துப் போனபோது அந்த வழியாக அவர்கள் பார்த்து தான் என் மகள் பேனில் தூக்கு போட்டது பார்த்து தகவல் சொன்னார்கள் என்றால் சரியல்ல. உள் தாழ்ப்பாள் போட்டு என் மகள் தூக்கு போட்டுக் கொண்டதால் அதன் பிறகு கதவை திறக்க முடியாமல் சத்தம் போட்டுக் கொண்டிருந்தபோது இரண்டாவது எதிரி கணேசன் ஜன்னலயாவது உடைத்து உள்ளே போங்க என சொன்ன பிறகுதான் ஜன்னலை உடைத்து உள்ளே இறங்கி உள்ளார்கள் கொத்தனார் தான் ஜன்னலை உடைத்து உள்ளே சென்றார் என்றால் சரியல்ல. கொத்தனார் சித்தாள் ஆகியோர்தான் உள்ளே ஜன்னல் வழியாக சென்று என் மகளை இறக்கி பின்னர் தாழைதிறந்தார்கள் என்றால் சரியல்ல.அதன் பிறகு இறந்து விட்டது தெரிந்ததால் அவரை தரையில் அனைத்து சம்பிரதாயங்கள் செய்து படுக்க வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. அதன் பிறகு இரண்டாவது எதிரி கணேசன் அவர்கள் ஊர் தலைவர் ரமேஷ் மூலமாக எனக்கு தகவல் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் பிறகு நானும் என் மனைவி மற்றும் எங்கள் ஊரில் இருப்பவர்கள் அங்கு வந்து இங்கு உள்ள இரண்டாவது

கணேசன், மூன்றாவது எதிரி சந்திரா ஆகியோரை அடித்து வீட்டையும் அடித்து உடைத்து சேதப்படுத்தினோம் என்றால் இல்லை. இதை கேட்ட நான்காவது எதிரி மகேந்திரனையும் அவர் சம்பந்தப்பட்டவர்களையும் நாங்கள் அடித்துவிட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள்தான் ஊரில் இருப்பவர்கள் வந்து அங்கு அடித்து உடைத்து ஊரில் அருகில் இருப்பவர்கள் வந்தவர்களையும் துரத்திவிட்டு காவல் நிலையம் சென்று காவல்துறையினரிடம் சொல்லி அவர்களையும் அழைத்துக் கொண்டு வந்து பலவிதமான தொந்தரவுகளை நாங்கள் தான் செய்தோம் என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு மகளின் உடம்பை எடுத்துச் சென்ற பிறகும் என் மருமகனின் ஊர்காரர்கள் யாரையும் வரவிடாமல் அங்கும் பிரச்சனை செய்து நானே மகளின் உடம்பை பெற்றுக்கொண்டு எங்கள் ஊருக்கு போய்விட்டேன் என்றால் சரியல்ல. இந்த சமயத்தில் ஒண்ணாவது எதிரி ஸ்டாலின் துபாயில் தான் இருந்தார் என்றால் சரிதான்.

9. எங்கள் மகளை கட்டாயப்படுத்தி கருக்கலைப்பு செய்த காரணத்தினால் தான் மன உளைச்சல் காரணமாக மகள் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. இந்த புகாரை யார் எழுதினார்கள் என்றால் முனியப்பன் என்பவர் எழுதினார். எங்கள் ஊரைச் சேர்ந்தவர் அவர் இறந்துவிட்டார். என் முதல் விசாரணையில் பல்வேறு சம்பவங்களை நிகழ்வுகளை எதையும் இந்த புகாரில் நான் சொல்லவில்லை என்றால் ஆமாம், அவசரகதியில் அப்போது எழுதிக் கொடுத்து விட்டோம். ஊர் தலைவர் ரமேஷ் மூலமாகத்தான் எனக்கு தகவல் வந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் எனக்கு நேரடியாக வரவில்லை எங்கள் ஊரில் இருப்பவருக்கு தகவல் வந்து எனக்கு அந்த தகவல் கிடைத்தது அது உண்மைதான். என்னுடைய மூத்த மகளுக்கு என் மகள் கலா

இறந்ததாக தகவல் வந்து அவர் எனக்கு தகவல் கொடுத்ததாக தற்போது பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10. தற்போது நான் முதல் விசாரணையில் சொன்ன இந்த விவரங்களை அந்த அறையில் காத்தாடியில் கயிறு மட்டும் சும்மா இருந்தது. அங்கு தள்ளிதான் கீழே ஒரு ஸ்டூல் இருந்தது. ஸ்டூல் கீழே விழவில்லை நேராகத்தான் இருந்தது. அந்த கயிறு மூன்று முழத்துக்கு மேலாக இருக்கும் நல்ல மொத்தமாக இருந்தது, நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்த போது நான் அங்கு இல்லை என் மகளின் உடம்பு உடன் இருந்தேன் ஊர்காரர்கள் தான் காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்தார்கள். என் மகளிடம் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக என் முதல் விசாரணையில் சொல்லி உள்ள விபரங்களை நான் போலீசாரிடம் புகாரிலும் அவர்களுடைய விசாரணையிலும் சொல்லாமல் தற்போது வழக்கில் முதல் முறையாக சொல்கிறேன் என்பதால் பொய்யாக இப்போதுதான் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11. என் மகள் இறந்த பிறகு ஆர் டி ஓ விசாரித்தாரா என்றால் விசாரித்தார். அவ்வாறு அவர் விசாரித்த வகையில் எவ்விதமான வரதட்சணையும் கேட்கப்படவில்லை என்று அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அந்த முடிவு பற்றி தெரியாது. முதலில் சந்தேக இறப்பு என்று மட்டும் தான் இருந்தது அதன் பின்னிட்டு ஆர்டிஓ விசாரணை முடித்து வழக்கு முடிக்கப்பட்ட பிறகு நாங்கள் உயர் நீதிமன்றம் போனோமா என்றால் ஆமாம் .உயர் நீதிமன்றத்தில் வழக்கை முடிக்கலாம் என்று சொல்லி ஸ்டாலினை அழைத்துப் போனோமா என்றால் அவர் வந்தார் ஆனால் நாங்கள் அழைத்துப் போகவில்லை. அவ்வாறு ஸ்டாலினை உயர்நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்று

அங்கு பேசப்பட்டு பின்னர் இந்த வீட்டினை என் பேத்தி பெயருக்கு எழுதி வாங்கினோமா என்றால் அவராகவே எழுதிக் கொடுத்தார். எல்லா வழக்குகளையும் முடித்துக் கொள்கிறோம் என்று சொல்லி தான் பேசி வீட்டையும் பேத்தி பெயரில் எழுதி வாங்கிவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12. என் மகளை ஒண்ணாவது எதிரி ஸ்டாலினுக்கு திருமணம் செய்து கொடுத்த பிறகு அவரும் அவருடைய வீட்டிலும் என் மகளை நல்ல முறையில் கவனித்து வந்தார்கள் என்றால் இல்லை. ஏற்கனவே பிரச்சனை காரணமாக விவாகரத்து செய்ய இருப்பதாக முடிவு செய்து போலீசுக்கு போகும்போது ஸ்டாலினின் அண்ணன் வந்து தடுத்து பேசி மகளை அழைத்துச் சென்றதாக தற்போது பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஸ்டாலின் அண்ணன் என்று பொய்யாக இந்த வழக்கிற்காக ஒரு நபரை சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகள் தன் கணவர் மற்றும் குடும்பத்தாருடன் நல்ல நிலையில் தான் சந்தோசமாக இருந்து வந்தார் என்றும் நானும் என் மனைவியும் சேர்ந்து இரண்டாவது கர்ப்பத்தை கட்டாயப்படுத்தி கலைத்த காரணத்தினால் தான் மன உளைச்சல் காரணமாக என் மகள் தூக்கு போட்டு இறந்து விட்டார் என்றால் சரியல்ல. இதனை மறைக்க வேண்டும் என்பதற்காகத்தான் தகவல் கிடைத்து ஊரிலிருந்து வாகனத்தில் ஊர்காரர்களை அழைத்துக் கொண்டு வந்து எதிரிகளின் வீட்டையும் சேதப்படுத்தி வயதானவர்களையும் அடித்தோம் என்றால் சரியல்ல. அதன் தொடர்ச்சியாக ஒரு பொய்யான புகாரையும் கொடுத்து பொய்யாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஓம்/– அ. தீபா,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,(FTC)
தஞ்சாவூர்.